Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

# இயற்கையின் மனிதனுடன் கட்டடக்கலையும் விவசாயமும் உளவியலும்

சூர்யா கோ ப

79

**ஆய்வு நோக்கம்**

இயற்கையோடு எப்படி வாழ வேண்டும் என்பதற்காகவும் தனிநபர்களின் சிறந்த பதிப்பை வெளிக்கொணர்வதற்காக மக்கள் வாழ்வில் விவசாயத்தை ஒருங்கிணைத்து அவர்களின் வாழ்வியல் முறையில் மாற்றம் காண முனைந்து எடுக்கப்படும் முயற்சி.

**ஆய்வுச் சுருக்கம்**

அனைத்து உயிரினங்களும் சீராகவும் நன்கு செழித்து வளரும் சுற்றுச்சூழல் அமைப்பிற்காக இயற்கையுடன் ஒன்றி வாழ வேண்டும். இந்த வாழ்க்கை முறை "இயல் (அல்லது) இயல்பு" என்று அழைக்கப்படுகிறது. இந்த இயல்பான வாழ்க்கை முறை மனித வாழ்வின் சூழலியல், சமூக, கலாச்சார மற்றும் பொருளாதார அம்சங்களின் சமநிலையுடன் தொடர்புடையது.

"இயல் (அல்லது) இயல்பு" ஒரு சொல்லாக இருப்பது, சகவாழ்வு, தழுவல், மரியாதை மற்றும் வாழ்க்கை ஆகியவற்றுடன் இணைக்கப்பட்ட சொல்லாகும். இவ்வுலகில் எந்த விதமான குடியிருப்பும் கட்டிடங்களும் ஒரு சீரான மற்றும் அறிவொளியான வாழ்க்கை முறையை அடைய இயற்கையுடன் வாழ ஒரு தனிமனிதனின் மையத்தில் உருவாக்கப்படல் அவசியம். கீழ்காணும் கட்டுரையில் இதைப் பற்றிய விரிவாக்கம் மற்றும் பல்வேறு புதிய யோசனைகளும் உள்ளடங்கியிருக்கின்றன.

**திறவுச் சொற்கள்**

கட்டடக்கலை, விவசாயம், உளவியல், இயற்கை, மனிதன், சமநிலைத்தன்மை, வாழ்வியல் முறை, விழிப்புணர்வு, வாழ்க்கை

## 1.முன்னுரை

இயற்கையின் நியதியுடன் வாழ்வியல் முறையை அமைத்துக் கொள்ள வேண்டும். இதை எவ்வாறு செய்வது?

மனிதன் தோன்றிய காலத்தில் இருந்து அவன் பாதுகாப்பிற்காக அடிப்படையாகத் தேடிக் கொண்டது உணவும் தங்கும் விடுதியும்தான். இவை இரண்டும் காலப்போக்கில் வெவ்வேறு தோற்றங்களையும் பரிணாம வளர்ச்சியையும் கண்டிருக்கிறது. பச்சை மாமிசமும் காய்கறிகளையும் சாப்பிட்ட மனிதன் தற்போது ஒவ்வொரு மாநில கலாச்சாரத்தை பொறுத்து விதவிதமாக உணவு பொருட்களை உருவாக்கி உண்டு மகிழ்கிறான். அதேபோல் தன்னை இரவு நேரங்களில் மழையிலும் காற்றிலும் மற்றும் விலங்குகளிடமும் இருந்து பாதுகாத்துக் கொள்ள வெவ்வேறு வடிவில் குடில்களை

அமைத்துக் கொண்டான். மனிதன் இவற்றை தனக்கு பக்கத்தில் கிடைத்த பொருட்களை வைத்து மட்டுமே பயன்படுத்தி செய்ய இயல முடிந்தது. அப்படி இல்லை ஆனால் குகைகளில் இயற்கையாய் அமைத்துக் கொடுத்த குடில்களில் வாழ்ந்து வந்தார்கள்.

**2. தற்போதைய நிலை**

மனிதனின் பரிணாம வளர்ச்சியில் தற்போது உச்சக்கட்டங்களை நோக்கி பயணம் சென்று கொண்டிருக்கும்போது எண்ணற்ற சாதனைகளையும் கண்டுபிடிப்புகளையும் அள்ளித் தெளித்து விட்டுப் போகிறார்கள். அதே நேரத்தில் தனது நலத்தில் அதிகம் கவனம் செலுத்தாமல் மற்றவர்களின் நலத்திலும் கவனம் குறைவாக வைத்து இயற்கையின் பலவித ஆவணங்களை அளவுக்கு மீறி கொள்முதல் செய்து பயனடைய நினைக்கிறார்கள். இவை தனக்கும் கெடுதல் விளைவித்து இயற்கைக்கும் மாறாக மனிதனை செயல்படச் செய்கிறது. இதனின் விளைவு என்னவென்றால், தனது உடல் நிலையும் மனநிலையும் மனிதர்கள் செயல்பட உதவும் பிற பொருளாதாரம் சம்மந்தப்பட்ட வாழ்க்கை முறையும் இயற்கையுடன் ஒன்றி அமைக்காததால், சமநிலையில் வைத்துக் கொள்ள முடியாத கடினமான சூழ்நிலை அமைகிறது.

**2.1 எதிர் வினை**

இது வெவ்வேறு முறையாக மனிதனின் வாழ்க்கையையும், அவனை சார்ந்து இருக்கும் பிற மனிதர்களையும், பிற ஜீவராசிகளையும் கடும் பாதிப்பிற்கு உள்ளாகிறது. இயற்கையை அளவிற்கு மீறி ஆக்கிரமிப்பு செய்து பொருளாதாரத்தை மேம்படுத்தும் மனிதக் கூட்டம், தற்போது இயற்கையின் முறைகளை கற்றுக் கொள்ள நினைத்தால் கூட எளிதில் முடியாது போல. ஏனெனில் இயற்கை தன்னை மதியாமல் நடந்து கொண்டிருக்கும் மனிதனுக்கு கருணை காமிக்க இயலாது, தனது சீற்றத்தை காண்பித்துக் கொண்டுதான் இருக்கிறது.

**2.2 செயல் வினை**

இவ்வாறு தனது தேவைக்கு மீறி உணவிற்காகவும் தங்கும் இடத்திற்காகவும் மற்ற சொந்த சுகத்தை நாடி ஓடிக்கொண்டிருக்கும் மனிதர்களை எவ்வாறு மெதுவாகச் செல்ல வைப்பது? இது ஒரு பெரிய கேள்விக்குறியாக மட்டுமே இருக்கிறது. அறிஞர்கள், எழுத்தாளர்கள் மற்றும் பலர் பலவிதமான விதிமுறைகளையும் அளவு கோள்களையும் கொண்டு புத்தி அறிவினை சொல்லிக் கொடுத்து வருகின்றனர். தன்னலம் கருதி வாழும் சில மக்கள் கூட்டம் இவற்றை ஒழுக்க ரீதியாக கடைப்பிடித்து ஆற்றல் மிக்கவர்களாக இருக்கிறார்கள். அதுவும் இயற்கையின் செயலாகவே இருக்கிறது. மனிதனின் மூலமாகவே பிற மனிதர்களுக்கு அறிவை வழங்கும் முறை அது.

**2.3 செயல் இயலாமை**

ஏட்டுப்படிப்பும் கல்வி நிறுவனங்களுக்கும் செலவு செய்ய முடியாது வாழும் மனிதர்களும், இவை பற்றி ஒன்றுமே விவரம் தெரியாமல் உலகம் என்ன தருகிறதோ அவ்வாறு வாழ்வோம் என்று

இருக்கும் அப்பாவி பொதுமக்களும், எப்படி இந்த இயற்கைக்கு எதிராக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை உணர்வு பூர்வமாக அறியாமலேயே காலத்தை கடத்தி விடுகிறார்கள். இதை எப்படி சமாளிப்பது?

### 3. கேள்விக்கு என்ன பதில்

இந்த கேள்விக்கு நம் முன்னோர்கள் தன் வாழ்க்கை முறைகளை நன்கு அறிந்து, இயற்கைக்கும் மாறாக எதுவும் பெரிதாய் செய்யாமல் குடும்பம், ஊர் மற்றும் இயற்கையுடன் ஒன்றி வாழ்ந்து கொண்டிருந்த நாட்கள் இப்போதைய நம் வாழ்க்கை முறையை சமநிலைப்படுத்த உபயோகப் பொருளாய் அமைய வாய்ப்பு உண்டு. அதில் முதற்கட்டமாக இருப்பது விவசாயம்! விவசாயத்தை தொழிலாக மட்டுமே பார்க்காமல் வாழ்வியலில் எப்படி ஒருங்கிணைந்து பார்ப்பது என்பது இந்த தனிமனித முன்னேற்றத்திற்கு ஒரு முக்கியமான அங்கமாக ஆகிறது.

### 3.1 விவசாயம் மற்றும் கட்டிடக்கலையின் தற்போதைய நிலை

கிராமங்களில் இருக்கும் மக்களுக்கு விவசாயம் புதியதல்ல. ஆகையால் தான் இன்னும் நல்ல ஆரோக்கியம் கொண்டவர்களாக இருக்கிறார்கள். ஆனாலும் தற்போதைய பொருள் விநியோக கொள்கைகளால் அரிசி மற்றும் பால் மற்றும் சர்க்கரை அவர்களது சாப்பாட்டு முறையிலும் மிக அதிகமாக இருக்கிறது. இவை நம் மரபு உணவுகளான தானியங்களுக்கு மாறாக அளவிலும் பொருளாதாரத்திலும் மக்களுக்கு நல்லது செய்வதை விட ஆள் கிணற்றில் தள்ளி விடவே அதிகம் முனைப்புடையவைகையாக இருக்கிறது. ஆகையால் அந்த கிராமப்புறங்களிலும் இந்த ஏட்டுக்கல்வியானது கற்பிக்கப்பட வேண்டிய சூழ்நிலை உள்ளது.

இது உணவில் மட்டுமல்லாமல் கட்டிடங்களிலும் செயலாக்கத்தில் தான் இருக்கிறது. மண்வளம் மிகுந்த கிராமங்களிலும் நகரமயமாய் காட்சி அளிக்கும் தாரிசு கட்டிடங்களும் சிமெண்ட் பூச்சிகளும் பழைய மண் கட்டிடம் மற்றும் சுண்ணாம்பு பூச்சு வேலைப்பாடுகளை மறக்க வைத்துக் கொண்டிருக்கிறது.

இந்த சூழ்நிலை கிராமத்தில் தொடங்கி நகரத்தில் இன்னும் வேதனைக்குரிய நிலையில் பல மடங்கு மக்களின் உடல் நிலையையும் மனநிலையையும் பாதிக்கும் அளவிற்கு வீரியம் கொண்டதாய் உள்ளது.

### 3.2 கட்டிடக் கலைஞர்களின் பொறுப்பு

கட்டிடக்கலைஞர்கள் இந்த தேசத்தின் முன்னேற்றத்தை நோக்கி வேலை செய்ய முன்வர வேண்டும். அப்படி வருமானால் மக்களின் முன்னேற்றமே தேசத்தின் முன்னேற்றம் இவ்வுலகின் முன்னேற்றம் என்பதை புரிந்து கொள்வார்கள். இந்த முன்னேற்றத்தை எப்படி காண்பது என்ற முனைப்போடு போரிட்டால் இயற்கை வழிபாடே முன்னிலையில் வந்து நிற்கும் என்பதை அறிவார்கள்.

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

### 3.3 செயலாக்கம்

ஒரு மனிதன் மற்றும் அவர் குடும்பம் வாழ நல்லதோர் குடியிருப்பினை வடிவமைத்து கொடுக்கும் உரிமையும் பொறுப்பும் கட்டிடக்கலைஞர்களுக்கு உண்டு. அவ்வாறு இருக்கும்போது இதை எப்படி எல்லாம் அணுகலாம் என்பதை பற்றி ஒரு சிந்தனை:

__**கிராமப் பகுதியில் விவசாய நிலங்களில் நடுவே பண்ணை வீடு அமைத்தல்.**

__நகரம் **மற்றும் கிராமப்புறத்திற்கு நடுவே உள்ள பகுதியில் ஒரு குறிப்பிட்ட அளவிற்கு உள்ளே இருக்கும் நிலத்தில் வீடு அமைப்பு அதில் வெவ்வேறு வகை சிறு விவசாய தோட்டங்களை அமைப்பது.**

__**நகரங்களில் நில பற்றாக்குறையின் நடுவில் கூட்டு வீடுகள் மேலே கட்டப்பட்டு இருக்கும். அதில் எப்படி ஒரு ஒரு வீட்டிற்கும் விவசாயம் செய்ய வெளிச்சம் மிக்க திறந்தவெளி தோட்டங்கள் அமைக்க இடம் ஒதுக்குவதும் கூட்டு மாடித்தோட்டம் அமைத்து பராமரிப்பது எப்படி என்றும் கட்டிடக்கலை வல்லுனர்கள் மூலம் செயல்பட முனைவது.**

இவ்வாறு பல்வேறு புது சிந்தனைகள் மூலம் விவசாயத்தை கட்டிடக்கலைஞர்கள் ஒவ்வொரு வீடுகளுக்கும் கொண்டு செல்ல முடியும்.

## 4. விளைவு

### 4.1 விவசாயத்தின் எதிர்காலம்

விவசாயம் ஒவ்வொரு தனி மனிதனின் வாழ்வியல் முறையையும் தினம்தோறும் அவனின் நடைமுறையையும் நிதானத்துடனும் இயற்கை தன்மையுடனும் மாற்ற வல்லமை உடையது. அப்பேறு பெற்ற விவசாயம் இப்போது பொருளாதார அடிப்படையில் கைவிடப்பட்டு அது மீதான நம்பிக்கையை இறந்து கொண்டிருக்கிறது. ஆனால் மனிதன் முக்கியமாக இந்தியக் குடிமகன் குடிமகள் ஆகியோர் சாயத்தை கைவிடுமாறு ஆனால் அது கேலி கிண்டலுக்கு ஆளாகும். ஏனெனில் இந்தியா, குறிப்பாக தென்னிந்தியா, அதிலும் குறிப்பாக தமிழகம் விவசாயத்திற்கு பெயர்பெற்ற ஒரு நாடாகும். இது உலகத்திற்கே தெரிந்த நியதி. அதில் பெரும் மகப்பேறு அடைந்து உலகம் முழுவதும் வணிகம் செய்து வந்த மக்கள் நம் முன்னோர்கள். அப்போது இந்த அவநம்பிக்கைக்கு என்ன காரணம்? இது பெரும் ஆராய்ச்சிக்கும் எண்ணத்திற்கும் உட் கொள்ளப்பட வேண்டிய கட்டாயத்தில் உள்ள தலைப்பாகும் கேள்வியாகும்.

### 4.2 கட்டடக் கலையின் எதிர்காலம்

விவசாயத்தில் மட்டுமல்ல, கட்டடக் கலையிலும் பார்க்க வைத்த மக்கள் நமது முன்னோர்கள். 1800- 1900களில் தொழில் மயமாக்கப்பட்ட உலகிற்கு முன்னால், பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே அறிவியல் கோட்பாடுகளையும் ஆராய்ச்சியாகும் விஞ்ஞானத்தின் மூலமும் உருவாக்கப்பட்ட பல்வேறு கட்டிடப் பணிகள் நமது கற்களில் பதிக்கப்பட்டுள்ளன. எங்கேயெல்லாம்

ஏன் நாகரிகங்கள் பெருமிதம் அடைந்து இருக்கிறதோ அங்கே எல்லாம் ஆயிரம் வருட பழமையான கட்டிட அபூர்வங்கள் இருந்து கொண்டே தான் இருக்கின்றன.

எல்லோரும் குறிப்பிடும் தஞ்சை பெரிய கோவில் மட்டும் அல்ல, பழைய நாகரிகத்தில் ஒவ்வொரு வீட்டின் அமைப்புமே கலை நயத்திற்கு ஏற்றவாறும், மோர் பணியின் முனைபிற்கு ஏற்றவாறும், பொருளாதாரத்திற்கு ஏற்றவாறும் அமைந்திருக்கும். இது செட்டிநாடு வீடுகள் குறிப்பிடக்கூடிய காரைக்குடியில் இருக்கும் வீடுகளில் படிக்கிறது. வாஸ்து சாஸ்திரத்தை நன்கு புரிந்து காலத்திற்கு அழியாத புதூர் சிந்தனையால் உருவாக்கப்பட்டதே **"தொட்டிக் கட்டின வீடுகள்"** என்று பரவலாய் அடைக்கப்படும் பொதுமக்களின் அபூர்வ செயலாகும். இவை அந்தக்கால இலக்கியமும் அறிவியலும் கோல்களைப் பற்றிய அறிவும் இயற்கையின் பொருளை நன்கு அறிந்த கட்டிடக்கலையும் வல்லுநர்களால் அமைக்கப்பட்டதே ஆகும்.

### 4.3 இயற்கையின் மனிதனின் எதிர்காலம்

ஆகையால் இந்த இரண்டு தரப்பினரும் ஒன்று கூடி பொது நலம் கருதி அனைத்து மக்களுக்காகவும் செயல்பட்டு "தனிமனித முன்னேற்றமே ஊரின் முன்னேற்றம் என்பதை அறிந்து இயற்கையோடு வாழ்வியல் முறையை எப்படி அமைத்துக் கொள்வது என்பதை கற்றுக் கொடுப்போம்" என்ற குறிக்கோளுடன் செயல்படும் ஆனால், நம் இந்தியா இவ்வுலகிற்கே பெரிய சொத்தான அறிவுக் களஞ்சியமாக மாற வாய்ப்பு உள்ளது.

**" மனமிருந்தால் மார்க்கமுண்டு" - பழமொழி**

" Where there is a will, there is a way"

### 6.முடிவுரை

இவை போன்ற சிறிய முதல் பெரிய சிந்தனைகள் அனைவத்தையும் முற்போக்கு சிந்தனையுடனும் அறிவியல் ரீதியாக ஒரு மனித அறிவினை தன் உளவியல் கோப்புகளை நன்று அறிந்து ஒன்றிணைந்து மக்கள் அனைவரும் செயல்படுமானால் ஒரு மகிழ்ச்சி மிக்க வாழ்வியல் முறைக்கு நல்ல வடிவத்தை கொடுக்க முடியும். எந்த ஒரு செயலாக இருந்தாலும் எந்த ஒரு முடிவு எடுக்கும் போதும் இயற்கைக்கு மாறாக இருக்கிறதா என்று ஒரு முறைக்கு இருமுறை சிந்தித்து செயல்பட்டு பொதுநலம் கருதி ஒரு முடிவினை எடுக்கும் போது இயற்கை எப்பொழுதுமே நமக்கு ஆதரவாய் இருக்கும்.

### துனைநூற்பட்டியல் & பார்வைநூல்கள்

### (Bibliography&References)

Fukuoka, M. (n.d.). One straw revolution.

Fukuoka, M. (n.d.). The Natural way of farming.

Ananth, S. (n.d.). The Penguin Guide to Vaastu:
The Classical Indian Science of Architecture and Design.

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

Peterson, J. (n.d.). 12 rules for life.

Sinek, S. (n.d.). Start With Why.

சிவராமன், க. (n.d.). ஆறாம் திணை 1 & 2; ஏழாம் சுவை.

நம்மாழ்வார். (n.d.). வயிற்றுக்குச் சோறிடல் வேண்டும்.

**மேற்கோள்கள் (Citations)**

1. Simon Sinek – The Golden circle and the Concept of Life's purpose through 'Why'
2. Nammalvaar – Innovation in Natural farming techniques in Tamil language
3. Masanobu Fukoka – Revolution in Permaculture and Natural Farming
4. Jordon Peterson – Clinical psychologist's view on how to attain a full life with 12 strong rules for personal development
5. K.Sivaraman – Food and health improvement by consuming naturally and culturally relevant food.
6. Sashikala Ananth – Vaastu principles explanation; Energy of people depends on place, culture, food and habits – taught using Yoga, Vaastu Saashtras, temples, etc.

Note: Citatations are purely based on the understanding of the whole book and not just one or two pages.